சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :02.04.2025
வா.சா.1 – உமாதேவி W/o தியாகராஜன்
O.S No.268/2022 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ.2. நிபந்தனைக்குட்பட்ட கிரைய பத்திரம் கடனுக்காக ஏற்படுத்தி கொண்ட ஆவணமா என்றால் ஆமாம். வட்டி எவ்வளவு பேசப்பட்டது என்றால் வட்டி பேசப்படவில்லை. வழக்கு சொத்து வீடு ஆகும். வழக்கு சொத்து வீடு என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. வட்டி பேசப்படாத கடன் இல்லை என்றும் அவ்வாறு வட்டி பேசப்படவில்லை என்று குறிப்பிடுவது வழக்கிற்காக நான சொல்லும் பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமானது நிபந்தனைக்குட்பட்ட அடமானம் என்றும், பணம் கட்ட தவறிவிட்டால் கிரையமாக கருதப்படும் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணம் வட்டிக்காக எழுதப்படும் ஆவணம் என்றும் நான் தவறாக வட்டி இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாசா.ஆ.2 ஆவணம் 3 வருட கால அவகாசத்திற்குள் வட்டி மற்றும் அசல் செலுத்தி, சொத்து மீட்கப்படவில்லை. என்றால் அது கிரையமாக கருதப்படுவதாக வா.சா.ஆ.2ல்கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதில் வட்டி எழுதப்படவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் வாதி காத்தானால் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும். நாங்கள் தயாரிக்கவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் வாதியால் தயாரிக்கப்பட்ட ஆவணம் அல்ல என்றம், நான் தான் தயாரித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வட்டியை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3 வருடத்திற்குட்பட்டு, நாங்கள் பணத்தோடு சென்றோம். ஆனால் வாதி வாங்க மறுத்துவிட்டார். பிரதிவாதியை பணத்தோடு நாங்கள் அணுகவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நான்

பணம் எதுவும் செலுத்தவில்லை என்றும் அதனால் சொத்தை நீங்களே வைத்துக்கொள்ளுமாறு கூறிவிட்டேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான பட்டா, மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வீட்டிற்கான மின் இணைப்பும் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் வழக்கு நிலுவையில் இருக்கும் போதே மாற்றிவிட்டார்கள். வா.சா-ஆ.2 ஆவணம் அடமானத்தை மீட்டுக்கொள்ளாமல் இருந்த நிலையில் அது கிரையமாக கருதபட்டு அனைத்து வருவாய் துறை ஆவணங்களும் மின் இணைப்பும் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டன என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பணம் ரூபாய் 70,000 பிரதிவாதியிடம் கடனாக பெற்று ரூபாய்1,40,000த்தை திருப்பி செலுத்துமாறு கட்டாயப்படுத்தியதாக கூறுவது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்படும் விபரம் என்றால் சரியல்ல. நத்தம் Equitas வங்கியில் கடன் பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. Equitas வங்கியில் உள்ள கடனை பிரதிவாதி காத்தானிடம் வாங்கி செலுத்தியதாக கூறுவது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. 8 லட்சம் ரூபாய் பிரதிவாதி சொத்தை கொடுப்பதற்கு என்னிடம் கேட்டார் என்
று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா-ஆ.2 ஆவணத்தின் படி கடனை 3 ஆண்டுக்குள் செலுத்த தவறிவிட்டதால்வழக்கு சொத்து பிரதிவாதியான காத்தானுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகிவிட்டது என்றும் அதனால் சொத்தின் அனுபவத்தை அவரிடம் ஒப்படைக்ககடமைப்பட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. வட்டியே இல்லாமல் நான் கடன் பெற்றதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதியான காத்தான் இதே நீதிமன்றத்தில் இந்த வழககில் எதிர் பரிகாரம் தனக்கு சொத்து பாத்தியம் என்று கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றும், அவருக்கு எதிர் கோரிக்கை

வழக்கு தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் நானே பிரதிவாதிக்கு பதிவு செய்து கொடுத்துவிட்டு தற்போது அதே ஆவணம் செல்லாது என்று கூறுவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் பரிகாரம் தள்ளுபடிக்குரியது என்றும், நான் 25.09.2019 தேதியிட்ட வா.சா.ஆ.2 ஆவணம் செல்லாது என்று அறிவிக்கோரியிருக்கும் பரிகாரம் செல்லாது என்றால் சரியல்ல. நான் சொத்தை மீட்பதற்கு அடமானம் மீட்பு பரிகாரம் கோராமல் வா.சா.ஆ.2 ஆவணம் மட்டும் செல்லாது என்று அறிவிக்க கோரியிருக்கும் பரிகாரம் ஏற்புடையதல்ல என்று கூறியிருப்பதால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நான் வழக்கு தொடர்பாக ரூபாய்3,65,000த்தை 27.01.2025 தேதியில் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கானது பிரதிவாதி காத்தானுக்கு பாத்தியப்பட்ட சொத்தாக கருதி தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் எதுவும் இல்லை என்றும் வழக்குமூலம் தள்ளுபடிகக்குரியது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்துவிட்டு பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் எதிர்கோரிக்கை பரிகாரம் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.04.02 19:04:58 +0530

Sub Judge
Melur